மயிலிட்டி முனையன்வளவு 9.131

அருள்மிகு முருகையன் தேவஸ்தானம்.



23-7-1980

# சித்திரத் தேர் சிறப்பு மலர்

மயிலிட்டி முனையன்வளவு

அருள்மிகு முருகையன் தேவஸ்தானம்.






# சித்திரத் தேர் சிறப்பு மலர்

**23-7-1980**

மயிலிட்டி முனையன் வளவு



# அருள்மிகு முருகையன்



# சமர்ப்பணம்



முருகையன் அடியார்களின் நல்லெண்ணத் தாலும் அறச் செல்வர்களின் நல்லாதரவாலும் சிற்பச் செல்வர்களின் கைவன்மையாலும் முருகை யனுக்கு அழகான சித்திரத் தேர் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இப்புனித திருப்பணி நிறைவு பெற்ற தை யொட்டி ஆடி மாதம் 8 ம் திகதி (23 - 7 - 80) புதன்கிழமை வெள்ளோட்ட விழா சிறப்பாக எடுக்கப்படுகிறது.

இப்பெரு விழாவின் நினைவாக சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென்ற விருப்பம் ஆலய நிர்வாக சபையினர்க்கு ஏற்பட்டது. அவ் விருப்பத்தின் விளைவே இம் மலராக மலர்ந்துள்ளது.

ஞான மணங் கமழும் இவ்வழகு மலரை
முருகையன் திருவடிகளில்
பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

**அருள் மிகு முருகையன் தேவஸ்தான சபை.**

## விருத்தம்

ஏர் பெருகு மயிலிட்டி எழுந்தருளு முருகவேளின்
ஊர் மகிழும் வெள்ளோட்ட வுயர்வுடைய தேர் விழாவை
சீர் பெறவே ஊர் மக்கள் திரளாக வந்து கண்டு
பார் புகழ வருள் பெற்று பல்லாண்டு வாழ்குவீரே.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய

# ஆசியுரை

மயிலிட்டி முனையன் வளவு அருள்மிகு முருகையன் ஆலயத்திற்கு ஓர் சித்திரத் தேர் உருவாகி அதன் வெள்ளோட்ட விழா 23 – 7 – 80 நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளதையிட்டு பெருமகிழ் வெய்துகின்றோம். இச் சித்திரத் தேர் மயிட்டியைச் சேர்ந்த சிற்பக்கலைஞர், திரு. சி. நவரத்தினம் அவர்களின் சிற்பக் குழுவினரால் உருவாகியது அதை விடச் சிறப்பு உள் நாட்டில் கலைஞர்களின் கலைத்திறனைப் போற்ருது எதற்கும் வெளிநாட்டை எதிர் பார்க்கும் காலம் மலையேறி விட்டது இன்று எமது கலைஞர்களின் கலைத்திறனை நாமே போற்றி பாராட்டுகின்ருேம்.

கலைஞர் நவரத்தினம் அவர்களது கலைச் சேவையைப் பாராட்டி அன்னாரைக் கலைஞர் திலகம் என்று கௌரவித்து வாழ்த்துகிருேம். தேர்த் திருப்பணிச் சபையினரையும் மயிலிட்டி வாழ் பக்தர்களையும் உளமார ஆசிர்வதிக்கின்ருேம்.

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய
ஸ்வாமிகள்

மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ

சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

புண்ணியச் செயலில் ஈடுபடுபவர்கள் புண்ணியவான் களாவர். பசு புண்ணியம் பதி புண்ணியம் என இருவகைப் படும். மேலான புண்ணியங்களில் பதி புண்ணியமே மிக மிகச் சிறந்தது. பதி புண்ணியம் எனும் போது அது தெய்வங் களுக்குச் செய்யும் உத்தம யாகமாகவும் மாறுகிறது. அறப் பணியாக உருவாகும் பதி புண்ணியங்களுள் இறைவனுக்கு திருத்தேர் செய்வதும் அடங்கும் இத்தேரினை நிறுவும் சிற்பி கள் பூசுரர் வரிசையில் இடம் பெறுகிறார்கள். அதனால் அவர்களுக்கும் "ஆச்சார்யர்" பட்டாபிஷேகம் நடை பெறுகிறது.

தேர்கள் செய்வதாயின் அதற்கு தனியான கலைப் பயிற்சி, புத்திக் கூர்மை, சாமர்த்தியம், அஷ்டாவதானம், ஒழுக்கம் என்பன நிறைய வேண்டும். இப்படியான நற்குணங் களைக் கொண்ட சிற்பிகள் உருவாக்கும் தேரினை தேரோட்டம் விடப்படும் போது ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், விடா முயற்சி, பேரானந்தம் என்பனவும் மக்களிடையே தோன்றுகின்றன. இதனால் நாடு சுபீட்சமடையும் ; ஆகவே தேர்ச் சிற்பிகளின் மகத்துவம் எத்தகைய தென்பதை உணர முடியும். "மகாரதம்" பிரபஞ்சத்தின் சின்னமாகிறது. இறைவன் அதன் நாயகனாக இருந்து உலகை நடாப்பிக் கின்றான் என்பதுதான் தத்துவம் தேரின் பீடங்கள் மந்திர யந்திர சாத்திர அடிப்படையில் பல்வேறு கோணங்களில் அமைகின்றன. ஊர்ந்து செல்லும் சக்கரத்திலிருந்து உச்சியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கலசம் வரை கவனமாகப் பார்த்து சிந்திப்பின் அது ஒரு திருக் கோவில் போன்ற வடிவினைத் தரும் ஆகவே தெய்வம் தேரேறி வரும்போது திருக்கோவிலே உலாவருகிற காட்சியைத் தருகிறது.

தேரிலே முதற்படியாக பூவுலக வாழ்க்கையும் அடுத்த படியாக தேவலோக வாழ்க்கையும் தொடர்ந்து சுவர்க்கலோக வாழ்க்கைச் சிறப்புகளும் என்றபடியும் சிற்பநூல்களின்படி பார்விதானம், உபபீடம் அதிஷ்டானம், பேருர்மட்டம் நராசனம் தேவாசனம்,சிம்மாசனம் என்றும் நிறுவப்படுகிறது. பற்பல வடிவங்களைக் கொண்ட தேர்கள் பல பெயர்களினுல் அழைக்கப்பட்டாலும் பிரம்ம தேவரைச் சாரதியாகக் கொண்ட தேருக்கே திருத்தேர் என்றும் மனேரதம் என்றும் கூறப்படுகின்றது.

மயிலிட்டி முனையன் வளவு அருள் மிகு முருகையனுக் கும் ஓர் தேர் செய்வதை யான் அடிக்கடி பார்த்ததுண்டு. அழகான தேர் மிக ரம்யமான வேலைப்பாடு, முகோத்தரங் கள் சில புது மாதிரி சேர்க்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஓர் தனியழகு. துணிந்து நின்று வெகு சாமர்த்தியமாய் இத் தேரை உருவாக்கிய ஆச்சாரிகள் நவரத்தினமும் அவருடன் துணைநின்ற சண்முகநாதனும் போற்றுதற் குரியவர்கள். ஈழ நாட்டு கலைஞர் குழாம் தலை நிமிர்ந்து நிற்கக் கூடியதாக இந் நாட்டிற்கே பெருமை தேடித் தந்த கலைஞர் நவரத்தினம் குழுவினரை இந் நாட்டு மக்கள் என்ன செய்யப் போகிருர் கள் என்பதை பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும்.

நவரத்தினமும் அவர் துணைக் கரமாம் சண் முகநாதனும் அவர்களது சிற்பாலய கலைஞர்களும் நீடுழி நிலை பெற்று அவர்தம் கலைச்சேவை பாரதநாட்டிற்கு உதவும் வகையில் திருத் தொண்டாக அமைய மாவை முருகப் பெருமான் நல்லருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின் றேன்.

சு. து. சண்முகநாதக் குருக்கள்

வடமாநில சித்திர வித்தியாதரிசி நுண்கலைச் செல்வர்

## கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின்

# வாழ்த்துரை

வடமயிலை முனையன் வளவு முருகப் பெருமான் பிரமோற்சவத்தின் போது எழுந்தருளிப் பவனி வருவதற்குரிய சித்திரத் தேரினைப் புதிதாக உருவாக்கி 23 – 7 – 80 அன்று வெள்ளோட்டம் நிகழ்த்த இருப்பது சைவாபிமானிகள் யாவர்க்கும் மிக்க மகிழ்ச்சியைத் தரும் செய்தியாகும். இச்சித்திரத் தேரை ஸ்தபதி சி. நவரத்தினம் அவர்களும் அவர்தம் குழுவினரும் தமது கன்னிப் படைப்பாகப் படைத்துள்ளனர். ஈரேழு பதினான்கு உலகினையும் உள்ளடக்கியதாகிய தாற்பரியத்தைக் குறிப்பிடுவது தேரின் தத்துவம் இத்தகைய பரந்துபட்ட பாரிய கருத்தினை உடைய சித்திரத் தேர்களை உருவாக்குகின்றவர்களை ஆசி கூறுபவர்களுக்கும் அத்தகைய ஆசிகளைப் பெறுபவர்களுக்கும் முக்கியமாக சில தகுதிகள் வேண்டற்பாலது. இங்கு இவை உண்டு என்பது எமது சிற்றறிவிற்கேற்ற கருத்தாகும்.

எனவே திரு. சி. நவரத்தினம் அவர்களின் கலைப்பணி பல்கிப் பெருகிப் பல்லாண்டு வாழ்க என முருகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ஆ. தம்பித்துரை**

காங்கேசன்துறைத் தொகுதி தே. அ. பே. உறுப்பினர்

## எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின்

# வாழ்த்துரை

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தமிழ்த் தெய்வம் முருகையன் சிறப்புற ஆலயங் கொண்டிருக்கும் மயிலிட்டி முனையன் வளவு முருகையன் தேவஸ்தானத்தினர் மூன்றரை இலட்சம் ரூபா செலவில் முழுவதும் உள்ளூர் சிற்பாசாரியர்களால் உருவாக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் தொடர்பாக வெளியிடப்படும் மலருக்கு எனது நல்லாசிகள். மலரும் விழாவும் சிறப்புற அமைய கடற்கரையில் கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமான் அருளை வேண்டுகிறேன்.

அ. அமிர்தலிங்கம் பா. உ.

துர்க்கா துரந்தரி

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

## சித்திரத் தேரில் திருமுருகன் அருட்பவனி.

மயிலிட்டி கடற்கரையில் அலைமோதி அழகு தரும் திருக்கோயிலாக விளங்குவது முருகையன் ஆலயம். ஆண்டு தோறும் இவ்வாலய மகோற்சவம் மகோன்னதமான முறையில் நடைபெற்றுவருவதை நாமறிவோம். மகோற்சவங்களில் முதன்மையானது இரதோற்சவமாகையால் அழகிய சித்திரத் தேரில் அப்பன் முருகையனை எழுந்தருளுவிக்க விழைந்தனர் இவ்வூர் மக்கள், இம் முயற்சி வெற்றிகரமாக நிறைவேற முன்னின்று பணிபுரிந்த சிறப்புச் செல்வர் திரு. சி. நவரத்தினம் அவர்களும் குழுவினரும் எமது பெரும் பாராட்டுக்குரியவர்கள் அழகொழுகும் பெருமானுக்குப் புதிய சித்திரத் தேர் அமைக்கும் புண்ணியம் இவர்களுக்கு கிடைத்ததே பெரும் பேறு. இரதோற்சவம் என்பது சங்காரத் தொழிலை உணர்த்தி நிற்பது தேரின் தோற்றம் அக்கினி கொழுந்து விட்டெரியும் அமைப்புக்குச் சமமானது "சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்" என்முர் உண்மை விளக்க ஆசிரியர்.

சிங்கங்களை யொத்த தரும விருத்திகளையும் யாளிகளைப் போன்ற அனுபவங்களையும், கொடிகளைப் போன்ற தத்துவக் குழாய்களையும் மணிகளைப் போன்ற வாக்கொலிகளையும் குஞ்சங்களைப் போன்ற மனச்சலனங்களையும் சங்கரித்து ஞான ஒளிமயமாக ஓங்கிநின்று இறைவன் திருவடி நிழலை அடைதலையே தேரின் அமைப்புக் காட்டுகிறது. கலசம் என்பது திருவருளையும் உச்சிக்குடை திருவடி நிழலையும் குறிக்கிறது.

இவ்வாறு ஒரு திருத்தேரின் தோற்றமே ஒரு திருக்கோயில் அமைப்பை விளக்குவது மன்றி ஆன்மா மும்மலங்களில் நின்று விடுபட்டு வீறுபேறடையும் மாட்சிமையையும் உணர்த்துவதாகும்.

எனவே இப்புண்ணியச் செயலில் ஈடுபட்ட அனைவருக்கும் இதனை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களுக்கும் முருகையன் திருவருள் நிரம்பக் கிட்டும் என்று போற்றி அமைகிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

மில்க்வைற் தொழிலதிபர்

## சிவநெறிப் புரவலர் சமாதான நீதவான்

## க. கனகராசா அவர்களின்

# ஆசியுரை

நாளென் செயும் வினை தானென்
செயு மெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

மயிலிட்டி முனையன் வளவு அருள் மிகு முருகையன் ஆலயத்தின் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்பு மலரிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்கிறோம்.

வெவ்வினையை வேரறுக்க வல்ல ஆறுமுகனுக்கு இன்று மயிலிட்டி வாழ் அடியார்கள் சித்திரத் தேர் ஒன்றை உருவாக்கியுள்ளனர். முருகையன் மக்களுக்கு அஷ்டஐஸ்வரியங்களையும் அருளையும் கொடுக்கப் பிரார்த்தித்துக் கொண்டு மலர் சிறப்புற எமது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்

திரு. ஆலவாய்
யாழ்ப்பாணம்.

க. கனகராசா ஜே. பி

காங்கேசன்துறை மகா வித்தியாலய முன்னைநாள் அதிபரும் தற்போது வீமன்காமம் மகாவித்தியாலய அதிபராகப் பணிபுரிபவருமான

# திருமதி. புவனேஸ்வரி சச்சிதானந்தம் அவர்களின்

# வாழ்த்துரை

மயிலிட்டி முனையன் வளவு அருள்மிகு முருகையன் தன் பேரருளால் சித்திரத் தேர்த் திருப்பணி நிறைவு கண்டு திரு வீதியில் தேரோடும் புனிதத் திரு நாளிலே வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

ஊர்கள் தோறும் கோயில்கள் கண்ட எம் முந்தையர் கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டா மென்றார். குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் அமைய வேண்டும் ஊர் என்றார்கள். பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மக்கட் சமுதாயம் வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து உய்தி பெற நம் முன்னோர் அளித்த அரியவற்றுள் அரியது விழாக்காணும் வழக்கமாகும். கோயிலுடன் தொடர் புறுத்தும் திரு விழாக்கள் மக்களை நல்லாற்றுப்படுத்தி இம்மையில் சீரும் சிறப்பும் சோறும் கூறையும் தந்து, அம்மையில் நிலைபேறான பெருவாழ்வைத் தர வல்லன வன்றோ? இவற்றுளும் தேர் விழாப் போலச் சிறந்த பயன் தருவதோர் விழா பிறிதில்லை.

கலியுக வரதனான கருணைக் கந்தன் அருள்மிகு மயிலையின் முருகையன், அன்பர்கள் உள்ளங்கள் தோறும் எழுந்தருளி வினை தீர்த்து உலகுய்யும் வண்ணம் தேர் அமர்ந்து அருள் சுரந்து தெரு வீதி வரும் காட்சியைக் காணாத கண்ணென்ன கண்ணே. தேரார் வீதியில் அமரர் குழாம் வந்து திசை தோறும் நிறைந்து மலர் தூவி மகிழ பாரார் புகழ்ந்து போற்றும் திரு மிகு சித்திரத் தேரை தொழிற் திறனும் கைவண்ணமும் நடம் புரிய அமைத்த கலைதெரி சிற்பிகள் நம் நாட்டவர் மயிலிட்டி ஊரவர் இவர்களிற் சிலர் நம் மாணவர் என எண்ணும் போது உள்ளம் மலர்ந்து மேனி சிலிர்க்கிறது. அவர்கள் தெய்வத் திருத் தொண்டும் கலைத்திறனும் வளர்க.

(கந்தன் கழலடி சரணம்)

திருமதி, பு. சச்சிதானந்தம்

காங்கேசன்துறை பட்டினசபை விசேட ஆணையாளர்

# திரு. க. சண்முகநாதன் அவர்களின்

# வாழ்த்துரை

நீலத்திரைக் கடலோரத்திலே அருள் ஒளி பரப்பும் மயிலிட்டி முருகையன் திருக்கோயிலுக்கு அழகும், அமைப்பும் மிக்க சித்திரத்தேர் பல இலட்ச ரூபா செலவில் உருவாகி, அதன் வெள்ளோட்ட விழா 23-7-80 - ம்திகதி நடைபெறத் திருவருள் கூடியுள்ளது குறித்துக் களி பேருவகை அடைகின்றோம். இச் சித்திரத் தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞர் திரு சி. நவரத்தினமும், அவரது பிரதம உதவியாளர் திரு. செ. சண்முகநாதனும், ஏனைய கலைஞர்களும், மயிலிட்டியைச் சேர்ந்தவர்கள் என்னும்போது எமது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

இது போன்ற பாரிய சிற்ப வேலைகளைச் செய்வதற்கு முழுக்க முழுக்கத் தமிழகச் சிற்பக் கலைஞர்களை நம்பியிருந்த நிலையைத் தலைகீழாக மாற்றித், தமிழகத்தில் உள்ள கலைஞர்களுக்கு நாம் எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதைத் தம் கன்னிப்படைப்பின் மூலம் கண் கூடாகச் செய்து காண்பித்த சிற்பக்கலை மாமணிகளைப் பெற்றெடுத்ததால் ஈழமணித் திருநாடும் யாழ்ப்பாணப் புனித மண்ணும் பெருமையடைகின்றன. இத்தேரிலே ஆறுபடைவீடுகள் வரலாற்றுப் பின்னணியோடு செதுக்கப்பட்டுள்ளன. இறைவன் திருக்கோலங்களும், பாயும் நான்கு குதிரைகளும், யாளி வரிமானங்கள், போன்றவையும் மாமல்லபுரச் சிற்பங்களை நமது நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

இத்தகைய அழகும், உயிர்த்துடிப்பும் மிக்க சிற்பங்களோடு ஒரு உன்னதத் தேரைச் சமைத்த சிற்பிகளையும் அவர்களுக்குப் பல்லாற்றானும் ஆக்கமும் ஊக்கமும் நல்கிய மயிலிட்டி வாழ் பெருங்குடி மக்களையும் வாழ்த்துகின்றோம்.

**க. சண்முகநாதன்**
**விசேட ஆணையாளர், காங்கேசன் துறைப்**
பட்டினாட்சிமன்றம்.

சித்திரத் தேரை உருவாக்கிய ஸ்தபதியார்

## திரு. சி. நவரத்தினம் அவர்களின்


# ஆசியுரை

கோயில் அமைப்பு முறைக்கும் தேர் அமைப்பு முறைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தேர் அமைப்பு முறைக்கேற்ப கோயில் கட்டடக்கலையை மத்திய காலக் கலைஞர்கள் வளர்த்து வந்துள்ளனர்.


சிற்ப நூல்கள் கோயில்களை மூன்று பிரதான பகுதிகளாகப் பிரிக்கின்றன. அவை; நாகரம், திராவிடம், வேஸரம் அல்லது வாராடம் ஆகும். தேரின் அமைப்பு முறைகளிலும் இவை வழக்கிலிருந்து வருகின்றன. அதாவது சதுரவடிவான தேரை நாகரம் என்றும், எண் கோண வடிவான தேரை திராவிடம் என்றும் கூறுகின்றன.

மயிலிட்டி முனையன் வளவு அருள்மிகு முருகையனுக்கு ஓர் தேர் அமைத்துத் தருமாறு முருகையன் பரிபாலன சபையினர் எம்மைப் பணித்தார்கள். அவர்கள் பணிப்பின் பேரில் வேலையை ஏற்று இது ஒரு திராவிட மரபுத் தேராக மூன்று வரிசை சிற்ப விக்கிரகங்களுடனும் யாளி வரிமானங்கள், குதிரை வரிமானங்கள் நான் மறைகளைக் குறிப்பிடும் நான்கு குதிரைகள் பிரமன் ஆகிய சிற்ப அம்சங்களுடன் கலைநுணுக்கங்கள் நிறைந்த வேலைப்பாட்டுடனும் இச்சித்திரத்தேர் பூரண பொலிவுடன் நிறைவெய்திட முருகையன் திருவருள் பாலித்துள்ளார். வெள்ளோட்டம் இனிது நிறைவேறி முருகையன் தேரில் பவனி வர எமது சிற்பாலயத்தின் சார்பில் ஆசி கூறி ஐயன் அருள் பெற்று உய்வோமாக.


சி. நவரத்தினம்



கோலக் குறத்தியுடன் குஞ்சரி மணாளன் உற்சவ மூர்த்தம்



ஸ்ரீ விநாயகர்



ஸ்ரீ வயிரவர்

# தேர் மீதிலே வரும்

# முருகையன்

கண்டேனே கண்ணாரக் கண்டேனே
ஐயன் முருகைய னவன்
ரதத்தினிலே பவனிவரும் அற்புதக்காட்சியை
கண்டேனே கண்ணாரக் கண்டேனே
கருணை பொழியும் திருமுகத்தில்
தவழும் புன்சிரிப்பைக் கண்டு
எங்கள் உள்ளம் உருகுதையா
நாம் எம்மை மறந்தோமையா
இந்த அருங்காட்சியை நாம் எப்போ
காண்போம் என்றிருந்தோம்
மனங்கனிந்து காட்சி தந்தாயையா
நாம் என்ன மாதவம் செய்தோமையா

சீரோங்கு மயிலைம்பதியிலுறை
ஐயன் முருகையன் தாள்
பணிந்தோர்க்கு தொல்லை நீங்கும்
கொடும் துன்பம் தீங்கும்
ஊர்தாங்கு சான்றோர் அடியவர் ஆசையால்
ஒப்பிலாவகையமைந்த
தேர் மீதிலே வரும் அப்பன் முருகையன்
மலர்பதம் போற்றி! போற்றி!

## முருகையன் சித்திரத் தேர் அமைத்த சிற்பிகள்.
## கனகசபை சிற்பாலயம் வடமயிலை.

கௌரவஸ்தபதியார்:- திரு. சின்னத்துரை நவரத்தினம்

உதவி ஸ்தபதியார்:- திரு. செல்லப்பா சண்முகநாதன்.

துணைச் சிற்பிகள்:- திரு. க. இராஜலிங்கம்

திரு. செ, சிவரத்தின சிங்கம்

திரு. செ. தியாகராசா

திரு. வே. நடராசா

திரு. க. பாலசுந்தரம்

திரு. வ. வேலாயுதம் (வர்ணவேலை)

திரு. சி முத்துக்குமாரு கடைச்சல் வேலை

திரு. வ. செல்லையா


திரு. இ. கதிரவேலு

திரு. வ. சிங்கராசா

திரு. ஆ நடராசா

திரு. ப, மாணிக்கவாசகர்
(இரும்பு வேலைகள்)





பிரதம ஸ்தபதியார்


# திரு. சி. நவரத்தினம்




வடமயிலை சிற்பாசாரியார்

அமரர். மு. கனகசபை அவர்கள்

# உதவி சிற்பிகள்



உதவி ஸ்தபதியார்
செ. சண்முகநாதன்




க. இராஜலிங்கம்



செ. தியாகராசா



செ. சிவரத்தினசிங்கம்



முருகையன் ஆலய முன்புறத்தோற்றம்.


ஆ. நடராசா  சி. நவரத்தினம் (ஸ்தபதியார்)
செ தியாகராசா  செ. சண்முகநாதன் (உப ஸ்தபதியார்). இ. கதிரவேலு
க. இராஜலிங்கம்  செ. சிவரத்தினசிங்கம்.




தேரை உருவாக்கிய சிற்பிகள்.


வ. சிங்கராசா  வே. நடராசா
க. தங்கவேலு  சி. முத்துக்குமாரு
க. பாலசுந்தரம்  வ. செல்லேயா [படத்தில் இல்லே]


# தேர்த்திருப்பணி வேலைகள் நடைபெறும் காட்சிகள்
























அடித்தள வேலைக்காட்சி





பந்தல் வேலைக்காட்சி


# தேரில் அமைக்கப்பட்ட சிற்பங்கள்




















அடித்தள வேலைக்காட்சி



பந்தல் வேலைக்காட்சி

# மயிலை முருகையன் ஊஞ்சல்

காப்பு

ஓங்காரச் சீர்வதனத் தொளியார் கூர்ங்கண்
உருவுறு பூ தாகாரத் தொந்தித் தண்டை
நீங்காத பருங்குறுத்தாள் நிலாவெண் கோட்டு
திருமலனைக் கணபதியை நினைந்து வாழ்த்தி
வாங்காருங் கடன் மயிலை யிடங்கொள் வீர
மாணிக்க தேவ துறை மருவு மேன்மைப்
பாங்காரு முருகையன் ஊஞ்சல் பாடிப்
பரவியவ னடியினைக் கண் விரவி யுய்வாம்

1. மாணிக்கப் பலகையிசைத் தனியார் முத்து
வடந் தொடுத்து மரகதப்பொற் பீடஞ் சேர்த்தி
நாணித்தா ரகை நடுங்கி யகல மின்செய்
நவ மணிச்சித் திரச் சரிகை விதானம் யாத்து
வாணிக்கு நாயகனும் மலராள் கோனும்
மகிழ்ந்திருபால் வந்திருந்து வடந்தொட் டாட்டும்
ஆணிப் பொன் னூசலணி திகழ மேவி
ஐயா எம் முருகையா ஆடீ ரூஞ்சல்.

2. செந்திருவுங் கலைமகளும் அடைப்பை தாங்கத்
தினகரனும் நிசிகரனும் கவரிதாங்க
அந்தகனுர் சுந்தரப் பொற் கவிகை தாங்க
ஆலவட்டங் கால் தாங்க அங்கி யேத்தும்
பந்த வொளி படர் மருங்கிற் பரிவு கூரும்
பாகசா தனன் புருஷ தீப மாகி
வந்தனைய மயிலிட்டி முனையன் நாம
வளவினுறை முருகையனே ஆடீ ரூஞ்சல்.

3. சிறை மருவு மயில் தோன்றச் சேவல் தோன்றத்
திருக்கரத்து வடிநெடுவேல் திகழ்ந்து தோன்ற
நறை மருவு மலர்க்கடப்ப மாலை தோன்ற .
நன்னுதலா ரிரு மருங்கு நயந்து தோன்ற
உறை மருவு கருணையெழில் வதனந் தோன்ற
உறுநர் குறை தவிர்த்துவக்கும் உறுதி தோன்ற

றை மருவு மயிலையருள் துலங்கத் தோன்றும்
சுந்தரனே எந்தமையாண் டாடீ ரூஞ்சல்.

4. மாணிக்க மாவலியன் றளித்த ஞால
வளாகமெலாம் விலக்கேற்கும் வளமார் வீர
மாணிக்க தேவதுறை வாழ்வே யன்பர்
மனத்திருள் தீர்த் தொளிருமணி விளக்கே செந்நெல்
மாணிக்க வாவ வெழு மாட்சி தோன்றும்
மயிலை திகழ் அயிலிலவே லரசே மாசில்
மாணிக்க பணிவண்ண அண்ண வெங்கள்
மகிபதியே முருகையனே ஆடீ ரூஞ்சல்.

5. கார்கடலின் பரப்பனைத்துங் கடந்து வேண்டுங்
கரையணையத் துணையணையும் புணையே போலும்
சீர்க் கமலக் கழலருளிச் சிறப்புன் வாழ்க்கைச்
செடியுடலத் தொடக்குறுவெம் பிறவி யென்னும்
பேர்க் கடல்யாம் கடந்திடமா ணிக்க தேவப்
பெருந் துறைக்கண் இருந்தருளும் பிரானே தெய்வத்
தார்க் கடம்ப மாலை திகழ் மார்பா ஞானத்
தனிமுதலே முருகையனே யாடீ ரூஞ்சல்.

6. பாச மெனும் பழங்கயிறோர் பாழின் மாட்டிப்
பண்டை விதி தொடுத்தமனப் பலகை யேற்றி
நேசமிகு திரோத வம்மை நேர்நின் றூட்ட
நினைவு மறந் தனவரத விளையாட் டென்றே
ஊசல் மகிழ்ந் தாடுமுயி ராட்ட மோய்ந்தே
உனதடியில் வீழவதோர் உறுதி வாய்ப்ப
ஆசிலுளத் தன்பரக விளக்காய் ஓங்கும்
அருமணியே முருகையனே ஆடீ ரூஞ்சல்.

7. தேம் பழுத்த மதுர செழுங் கலையாம் வேத
சிரப் பொருளாம் பிரணவநுண் பொருளார் ஞானத்
தீம்பயனை நாம் மெறுமா றருள வந்நாள்
சிவன் செவிக்கே புகன் றருளுந் தேவே தேவர்
தாம் பரிந்து தரு தெய்வ யானை யோர் பால்
தரணிதரு குறவள்ளி யோர் பால் மேவ
ஆம் பரிசங் கவர்க் கருளி அடியார்க் காக்கும்
அன்புருவே முருகையனே ஆடீ ரூஞ்சல்.

8, பரங்குன்றஞ் சீரலைவாய் தணிகை யாவிப்
பழநி பழ முதிர் சோலை சுவாமி குன்றம்
வரங்குன்றுக் கதிரை யொளி வளமார் நல்லை
மாருதப்ர வீகவல்லி மாண்பார் மாவை
தரங் குன்றுச் சந்நிதியே வெருகல் மண்டூர்
சார்ந்துனருள் நேர்ந்தவர்சீ ரார்ந்தீ டேறப்
பரங் கருணைத் தடங்கடலாய் மயிலை மேவும்
பரசிவமே முருகையனே ஆடீ ரூஞ்சல்.

9. உயி[illegible] குலமாந் தேவ கணம் உயங்க வாட்டும்
உருமருவு திரிமல வெவ் வரக்கர் மாளச்
செயிர்த் தடர்க்குந் திருவருளி னுடல் காட்டிச்
சேரவரு சூரசிங்க தார காதி
அயிற்படு வேற் கிரைப் படுத்த அரசே! அந் நாள்
அகத்தியனுக் கோத்துரைக்கும் ஆதி மூர்த்தி
மயிற்பரி மேற் கொண்டருளி மயிலை மேவும்
மாணிக்க துறை வாழ்வே யாடீ ரூஞ்சல்.

10. சுட்டபழங் கொடுத்தவ்வை தமிழ் த்தீம் பாடற்
சுவை நயந்து தோன்று பொய்யா மொழி தன் வாயில்
முட்டை வரும் பாடலுமுன் வியந்து கீரன்
முழுத்த தமிழ் சுவைத்து மிகு தமிழ்ப்பித் தேறி
இட்டமுறத் தமிழ்க் கவியால் வைதார் தாமும்
ஏற்ற முற வாழவருள் எந்தைக் கெம்புன்
வெட்ட வெளிற் றுரையூசல் விரும்பு மாறும்
விலக் கிலதே மலர்க்கழல் தந் தாடீ ரூஞ்சல்.

## வாழி

அந்தணர்கள் அருமறைகள் அறங்கள் வாழி!
ஆகம நன் னெறி வாழி அறவோர் வாழி!
வந்து மகிழ்ந் துலகோம்பும் பசுக்கள் வாழி!
வான் வாழி பயிர்வாழி உழவர் வாழி!
சிந்தையுயர் சிவனடியார் கூட்டம் வாழி!
திரு நீற்றுப் பேரன்பு சிறந்து வாழி!
முத்தி யெழு சிவ நாம முழக்கம் வாழி!
முருகைய னருள் வாழி! வாழி! வாழி!

# மங்களம்



பல்லவி

மங்களம் மங்களம் — நித்ய சுப
மங்களம் மங்களம்

சரணம்

மயிலைவாழ் முகையற்கு
மாணிக்க துறையையற்கு
கயிலையரன் மைந்தனுக்கு
கரவிலருட் கந்தனுக்கு — மங்களம்

சத்தி மிகும் வேலனுக்கு
சங்கரியாள் பாலனுக்கு
முத்தியருள் முன்னவற்கு
மூத்த பிள்ளை பின்னவற்கு — மங்களம்

சூர்கிளையை மாய்த்தவற்கு
தொடர் பிறவி தேய்த்தவற்கு
பார் பரவும் நாதனுக்கு
பரம சிவ போதனுக்கு — மங்களம்

# சிற்பக்கலையும், சித்திரத்தேரும்

வடமயிலை சிற்பக்கலைஞன்
செ. சண்முகநாதன்

இந்து சமய உண்மைகளை பொதுமக்களும், சிறுவர்களும் எளிதில் உணர்ந்து கொள்ளக் கூடியவிதத்தில் எடுத்துரைக்கும் நூல்களே இதிகாச புராணங்களாகும். இதிகாசங்களாகிய இராமாயணமும் பாரதமும் இந்து தர்மத்தை நீதி வழுவாத முறையில் பரிபாலித்து வந்த அரசர்களது வரலாறுகளை அழகும் கற்பனையும் நிறைந்த கதைகள் மூலம் எடுத்துரைப்பனவாகும். புராணங்கள் இறைவன் மக்களுக்கு வேண்டியவற்றை அருளும் பொருட்டுக் காலந் தோறும் நிகழ்த்தியுள்ள திருவிளையாடல்களை எடுத்துக் கூறுவனவாகும். இதிகாச புராணங்களிற் கூறப்பட்ட வரலாறுகளை மக்கள் இனிது பார்த்து இரசிக்கும் பொருட்டுக் கலைஞர்கள் அவற்றை கற்சித்திரங்களாகவும் சுவர் ஓவியங்களாகவும், தேர், மஞ்சம் முதலியவற்றில் மரச்சித்திரங்களாகவும் மிகப் பண்டைக்காலந் தொடக்கம் அமைத்து வருவது இந்திய நாட்டுக்கல்வி முறைகளிலொன்றாகும். எழுத வாசிக்கத் தெரியாத மக்கள் இச்சித்திரங்களின் மூலம் சமய சம்பந்தமான விசயங்களையும் அவை குறிக்கும் தத்துவங்களையும் எளிதில் அறிந்து கொள்ளுகின்றனர்.

தமிழ் நாட்டிலுள்ள தேர்களும் கோபுரங்களும் மக்களுக்கு வேண்டிய சமய அறிவைப் புகட்டும் ஒரு கல்வி நிலையமாக விளங்கி வருகின்றன. இன்னும் இந்துமக்களிடையே சமயத் தொடர்புடைய கதைகளும் வரலாறுகளும் அழியாது நிலவி வருவதற்கு இவை செய்யும் பேருதவி சொல்லுந்தரமன்று. எது உயர்ந்ததவோ, எதை மக்கள் கட்டாயமாக அறியவேண்டுமோ அவற்றையே பண்டைத் தமிழ்மக்கள் சிற்பக் கலைகள் மூலம் பரப்பினர்.

ஈழத்திருநாட்டில் சிற்பக்கலை வளர்ந்த வரலாற்றை நோக்கும்போது இந்தியாவில் முக்கியமாக தென்னாட்டில் இருந்த சிற்பிகளே இலங்கையின் கலைவளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தார்கள். பாரத நாட்டின் கலை கடல்கடந்து இலங்கை, சீயம், கம்போடியா போன்ற தேசங்களிற் பரவியுள்ளது. இலங்கையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிற்பக்கலை வளர ஆரம்பித்தது. இலங்கையின் வடபாகத்தை தமிழரசர் ஆண்ட காலத்திலே பலவித கலைஞர்கள் கோவிலை முக்கிய இடமாகக்கொண்டு பல விதக் கலைகளையும் வளர்த்தார்கள். கலையிற் சிறந்த சிற்பக்கலை வளர்க்க மரச்சிற்பிகள் தமது ஆற்றலும் வேலைப்பாடும் விளங்க எழிலொழுகும் எண்ணற்ற சிற்பங்கள் படைத்துப் புகழ் பெற்றனர்.

தேரைப்பற்றி நோக்குமிடத்து தேர்கள் பலவகைப்பட்டனவாகிலும் உருவ அமைப்பில் அதிகளவு வேற்றுமையில்லை. கோயில் அமைப்பு முறைக்கும் தேருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கோயில்கள் மூன்று பிரதான பாகங்களாகப் பிரிக்கப்படுகின்றன. நாகரம், திராவிடம், வேஸரம் அல்லது வாராடம் என்பதாகும். தேர் அமைப்பு முறைகளிலும் இது வழக்கிலிருந்து வருகின்றது. அதாவது சதுரவடிவமான தேரை நாகரம் என்றும் எண்கோண வடிவமான தேரை திராவிடம் என்றும் வட்டவடிவமான தேரை வேஸரம் என்றும் சிற்பநூல்கள் கூறுகின்றன. தேரின் அமைப்பு தாமரை மொட்டுப்போன்று அழகாக இருக்கவேண்டும் என்பது விதி. தேரின் அடிப்பாகத்திலே பூலோக வாழ்க்கை ஆகாய வாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை ஆகியவற்றைச் சித்தரிக்கும் சிறந்த பல உருவங்க

லேக் காணலாம். அரசன் கொலுவீற்றிருத்தல், நடனமாதர், காமத்துப்பாலேச் சித்தரிக்கும் பொம்மைகள் ஆகியன பூலோக வாழ்க்கையையும், கின்னரர் போன்ற உருவங்கள் வான வாழ்வையும் சிவன், விநாயகர், முருகன் முதலிய சிற்பங்கள் சுவர்க்க வாழ்க்கையையும் சித்தரிக்கின்றன.

நுண்கலேக்கு இருப்பிடம் போன்ற தேரை அமைக்கும்போது அது எந்தத் தெய்வத்திற்காகச் செய்யப்படுகின்றதோ அது அந்தத் தெய்வத்தின் அம்சம் பொருந்த அமைக்கவேண்டும். இத்தகைய தேரின் இலக்கணத்தில் இருந்து கடவுள் பரிவாரங்களுடன் தமது கோயிலாகிய தேரிலிருந்து கொண்டே ஒவ்வொரு காலத்திற்கும் தேடி வந்து நம்மை ஆட்கொள்ளுகின்ருர் என்பதே இதன் கருத்தாகும்.

மேற்கூறப்பட்ட அமைப்பு முறைகளுக்கேற்ப அமைக்கப்பட்ட தேரின் உறுப்புக்களேப்பற்றி நோக்கும்போது முதலாவதாக பூதப்பார்:- அச்சின் மேலுள்ள பகுதிகளே பூதங்கள் தாக்குவது போன்ற அமைப்பு. கன்னிலப்பார்:- முதல்வரிசை விக்கிரகங்களின் அமைப்புக்கு ஆதாரமாக அமைந்திருப்பது. கபோதகப்பார்:- விக்கிரகங்களின் மேல் அமைப்பாகவிருப்பது. கன்னிலப்பாருக்கும் கபோதகப்பாருக்கும் இடையில் முதல்வரிசை விக்கிரகங்கள் உண்டு. அச்சப்பார்:- இரதத்தின் பட்டங்களே அமைப்பதற்காக இருப்பது. அச்சப்பூத்தலேப்பார்:- பட்டங்களே அமைப்பதற்கு மேலாக ஆதாரமாயுள்ளபார். பூத்தலேப்பார்:- மகரக்காய்கள் பூட்டிய பூத்தலேகளே உடையது. இரண்டாவது நிலம்:- முதலாவது நில விக்கிரங்களுக்கு மேல் இரண்டாவது நில விக்கிரகங்கள் உண்டு. மூன்ருவது நிலம்:- இரண்டாவது நில விக்கிரகங்களுக்கு மேலேயுள்ளது. விஸ்தாரப்பார்:- இரதத்தின் விஸ்தீரணத்தைக் குறிக்கின்றது. இந்தப்பகுதிக்கு மானவாசனம் என்றும் பெயர். தேவாசனம்:- தேவர்கள் இறைவனே நின்று தரிசிக்கும் இடம் என்ற முறையில் அமைக்கப்பட்டது. சிம்மாசனம்:- இறைவன் வீற்றிருக்கும் ஆசனம். கம்பங்கள்:- சித்திர வேலேப்பாடமைந்த குத்துக்கால்கள். பண்டிகை:- முதற்பண்டிகை இரண்டாம் பண்டிகை, மூன்ரும் பண்டிகை. கர்ணக்குடம்:- மணிமுடி:- என்பனவாகும்.

ஈழநாட்டிலே இந்திய சிற்பிகளிஞலும் இலங்கைச் சிற்பிகளிஞலும் அமைக்கப்பட்ட பல தேர்கள் காணப்படுகின்றன, கனகசபை சிற்பக்குழுவினர் மயிலே முனேயன்வளவு முருகையன் திருவருளால் ஐயனுக்கு ஒரு தேர் அமைக்கும் பணியை ஏற்று எமது கன்னிப் படைப்பாக இதை செவ்வனே நிறைவேற்றி வெள்ளோட்டத்திற்கு தயாராக நிற்கும் இவ்வேளேயில் முருகையன் பாதங்கள் பணிந்து ஐயன் அருளே வேண்டுவோமாக.

மயிலிட்டி முனையன்வளவு அருள்மிகு முருகையன்

# கோவில் வரலாறும் திருப்பணி வளர்ச்சியும்

காங்கேசன்துறைபட்டினசபை எல்லேக்குள் மயிலிட்டிக் கிராமத்தில் கீரிமலே பருத்[illegible]துறை பிரதான வீதிக்கு அண்மையில் வடக்குப் புறமாக கடலோரத்தில் அலே கடல் தாலாட்ட அமையப் பெற்றதுதான் இந்த முருகையன் ஆலயம்.

இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் தற்போதைய ஆலயத்தின் உட்புற வடக்குப் பிரகாரத்தில் ஓலைக் குடிசை ஒன்றனுள் வேல் வழி பாட்டுடன் இல்வாலய ஸ்தாபிதம் ஏற்பட்டதாக இப்போது அறியக் கிடக்கிறது. சிறிது காலத்தின் பின், கல்லாலான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு, அகிலேசக் குருக்கள் என்ற அந்தணப் பெரியவரால் நித்திய நைமித்தியக் கிரியைகள் முறையாக ஆற்றப்பட்டு வந்தன. இவற்றுக்கு மூலகர்த்தாக்களாக இருந்தவர்கள், நமக்கு முந்திய மூன்றுந் தலேமுறையில் வாழ்ந்த கந்தப்பிள்ளை, சின்னவியர், பெரியவி பொடியர், என்ற மூன்று பெரியவர்கள் ஆவர். அந்தக்காலத்தில் கோவில் தெற்குப் பிரகாரத்தில் ஒரு பெரிய நன்னீர்க் கேணி இருந்ததாக தற்போது நம் மத்தியில் வாழும் முதியவர்கள் கூறக் கேட்கிறேம்.

தற்போதய பெரிய கோவிலின் ஆரம்ப வேலைகள் மேற் சொல்லப் பட்ட பெரியவர்களின் வழித்தோன்றலாகிய திரு. கந்தப்பிள்ளை அம்பலவர் என்பவர் காலத்தில் ஆரம்பமாயிற்று. கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம், தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம், அடங்கலாக வசந்தமண்டபத்துடன் கூடிய புதிய கோவிலின் மஹா கும்பாபிஷேகம் கிட்டத்தட்ட 45 வருடங்களுக்கு முன் நடைபெற்றது. இக் காலகட்டத்தில் சின்னையாக் குருக்கள் என்ற அந்தணோத்தமர் பூசகராக விளங்கினர். இவர் காலத்தில் பாரிசவாத நோயினல் பீடிக்கப்பட்டு முடமான அயலவரொருவர், பெருமானே தஞ்சமென்று கோவிலில் அடைக்கலம் புகுந்து, பெருமானின் திருநீற்று மகிமையால் நாளடைவில் குணப்பட்டு நடமாடி, பின் இறுதி வரைக்கும் கோவிலுக்கான சரியைத் தொண்டு புரிந்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதை உறுதிப்படுத்துமாப் போல் இன்றும் பெருமானின் திருநீற்று மருந்தை நாடி ஊரவர்கள் வருவது சர்வ சாதாரணம்.

மூலஸ்தானத்தில் வள்ளி தேவயானை சமேதராகிய முருகப் பெருமான் மயில் வாகனத்தோடு பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளார். பரிவார மூர்த்திகளாக விநாயகப் பெருமானும், வயிரவ மூர்த்தியும் அமைக்கப் பட்டுள்ளார்கள்.

புதிய கோவிலின் நிர்வாகப் பொறுப்பு மஹா கும்பாபிஷேகத்தோடு திரு. அம்பலவர் மருகராகிய கந்தப்பிள்ளை. முருகுப்பிள்ளையிடம் கைமாறியது கோவிலின் நித்திய நைமித்திய பூசைகளும் இந்தக் கால கட்டத்தில் துன்னாலையைச் சேர்ந்த அந்தண குலத்தவர்கள் கைக்கு மாறியது. திரு. முருகுப்பிள்ளைக்கு பிறகு வேலுப்பிள்ளை கந்தப்பிள்ளை என்ற பெரியவர் சில காலம் மணியகாரப் பொறுப்பை ஏற்று நடாத்தி வந்தார். இவர் காலத்தில் கோவிலின் உட்பிரகாரத்தில் நான்கு புறமும் முறையான கொட்டகை. மேற்சொல்லப்பட்ட பெரியவர்களின் பரம்பரையில் தோன்றிய திரு. க. துரைசாமி அவர்களால் அமைக்கப்பட்டது. துன்னாலையைச் சேர்ந்த அந்தணப் பெரியவர்களுள் திரு. சுப்பிரமணியக் குருக்கள் பெருமானில் மிகுந்த ஈடுபாடு உடையவராக விளங்கினர். கோவிலின் தற்போதய அபிவிருத்தியில் இப்போது பூசகராக விளங்கும் திரு. நாராயண சர்மாவின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்தக் கால கட்டத்தில் கோவிலுக்கு வேண்டிய சரியைத் தொண்டுகளை பெரியவி பொடியர் என்ற பெரியவரின் பரம்பரையில் வந்த திரு. பண்டாரம் சோமசுந்தரம் என்பவரும் அவரைச் சர்ந்தவர்களும் மிக ஈடுபாடுடன் ஆற்றி வந்தனர்.

திரு. வேலுப்பிள்ளை கந்தப்பிள்ளை என்பவருக்குப் பின், இந்தப் பரம்பரையில் வந்த இளம் தலைமுறையினராகிய நமது கூட்டுப் பொறுப்பில் நிர்வாகம் இப்போது நடைபெற்று வருகிறது.

வைகாசிப் ப[illegible]த்தில் இங்கு வருடாந்த உற்ச[illegible]ம் நடைபெறும். ஸ்கந்தசஷ்டி விரத காலத்தில் 6 நாட்களும் கந்தபுராண பாராயணம் நடைபெற்று, 6-ம் நாள் சூரசங்கார உற்சவம் நடைபெறும். இங்கு நடைபெறும் இச்சூரசங்காரத் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. அயற் கிராமங்களிலுள்ளவர்கள் பெருந்திரளாகக் கூடி வீதிகள் நிரம்பி வழியும் காட்சி கண் கொள்ளாதது. இவை தவிர திருக்கல்யாண, திருக்கார்த்திகைத் திருவிழாக்களும் இப்பொழுது நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயம் சம்பந்தப்பட்ட பணியில் தற்காலச் சந்ததியினரைப் பொறுத்தமட்டில், இப்போது அமைக்கப்பட்டுள்ள சித்திரத்தேர் திருப்பணி குறிப்பிடக்கூடியது. இவர்களின் ஆர்வமும் ஊக்கமும் கட்டுப்பாடாகவும் கிரமமாகவும் கிடைக்குமிடத்தில் கொடிஸ்தம்பமும் அதைச் சார்ந்தவையும் ஆறுமுகப் பெருமான் விக்கிரகமும் காலம் தாழ்த்தாது அமையலாம்.

வெற்றி வேல் துணை நிற்பதாக!

மு. கந்தசாமி
(ஆலய பரிபாலன சபைத் தலைவர்

# தேர் பற்றிய சிந்தனைகள் சில.

பண்டிதர் மு. கந்தையா B.A.

இறைவனுக்கு உள்ளமுங் கோயில் உலகமும் கோயில். உட[illegible]பிடமாகக் கொண்ட உள்ளத்திலே இறைவன் எழுந்தருளியிருக்கும் உண்மையைப் பிரதிபலிக்கும் நோக்கில் உடலின் அமைப்பியல் தழுவி ஆலயங்கள் அமைந்தன. அதே போல் உலகம் முழுவதையும் இடமாகக் கொண்டு இறைவன் எழுந்தருளும் உண்மையைப் பிரதிபலிக்கும் நோக்கில் உலகின் அமைப்பியல் தழுவித் தேர்கள் உருவாயின எனக் கொள்ளுதற்கு இடமுண்டு. இறையுண்மையை உள்ளும் புறமும் ஒப்பக்காணுஞ் சைவஞானத் தனிச் சிறப்பியல்புக்கு இது நிதர்சனமான ஓர் ஆதாரமாகும்.

நிமிர்ந்து கால் நீட்டிப் படுத்திருக்கும் ஒரு உடலின் சிரசிலிருந்து பாதம் வரை உள்ள உடற்பகுதிகளுக்குச் சமானமாக மூலஸ்தானத்திலிருந்து வாசற் கோபுரம் வரையுள்ள ஆலயப் பகுதிகளின் அமைப்பு அவதானிக்கற்பாலது. உடலின் பிரதான பகுதியாயுள்ள மூளையை இடமாகக் கொண்ட உள்ளத்திலேயே இறைவன் உள்ளமைக்குச் சமானமாக ஆலயத்தின் பிரதான பகுதியாகிய மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகத்தில் (மூர்த்தியில்) இறைவனிருத்தல் யாம் அறியக்கூடியதே. நிமிர்ந்து படுத்துக்கிடக்கும் உடலின் பாடங்கள் மேல் நோக்கி உயர்ந்திருப்பதக்குச் சமானமாக ஆலய வாயிற் கோபுரம் உயர்ந்து நிற்பதும் அங்ஙனமே. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட உடல் - ஆலய பகுதிகளுக்கும் சமானத்துவம் இருத்தல் விரித்து விளங்கிக் கொள்ளற்பாலதாகும்.

ஆகக் கீழே ஆதிகூர்மம் முதலாவது ஆக மேலே அண்டமுகடு இறுதியாக உள்ள உலகுக்குச் சரிசமானமாக ஆக அடியில் ஆதி கூர்மமும் ஆக நுனியில் ஒரு கூம்புமாகத் தேர் அமையும் அமைவின் பொருத்தமும் யாம் அறியக் கூடியதே. உலக அமைப்பில் சிவலோகம் என்று கருதப்படும் பகுதிக்குச் சமானமாக தேரில் தேவாசனம் ஒன்று வகுத்து அதன் மத்தியில் சிங்காசனமும் அமைத்து அதில் சுவாமியை எழுந்தருள வைக்கும் செயலும் அத்தகையதே.

தேரின் பழமை:

தேரைப்பற்றிய குறிப்புகள் வேதத்திலே உண்டு. தேர் அச்சு, சில்லு, கடையாணி, தேரிழுக்கும் குதிரை சம்பந்தமான கருத்துகள் வேதத்தில் உள்ளன, யசுர் வேதத்தில் ஸ்ரீ ருத்ரம் என்ற மந்திரப் பகுதியில்,

தக்ஷப்யோ ரதகாரேப்யஷ்ச வோ நமோ நம: 1
ரதிப் யோ அரதேப்யஷ்ச வோ நமோ நம: 2
ரதேப் யோ ரதபதிப்யஷ்ச வோ நமோ நம: 3

[ தச்சர்களாகவும் தேர்செய்கிறவர்களாகவும் உள்ள பரமேஸ்வரராகிய உங்களுக்கு வணக்கம் (1) தேரில் செல்பவர்களாகவும் தேரில்லாதவர்களாகவும் உள்ள உங்களுக்கு வணக்கம் (2) தேர்களிற் செல்பவர்களாகவும் தேர்களின் தலைவர்களாகவும் உள்ள உங்களுக்கு வணக்கம் (3) ]

என்ற இப்பகுதி காணப்படுகிறது. சிவனே தச்சனாகவும், சிற்பாசாரியாகவும், தேரில் இருப்பவனாகவும், தேருக்கு அதிபதியாகவும் இங்கு பேசப்படுகின்றது. மரத்தைத் துண்டுபடுத்தித்திச் சீவிச் செம்மைப்படுத்துபவன் தச்சன். சிற்ப இலக்கணம் அமைய அவற்றை இயைத்து உருவாக்குபவன் சிற்பாசாரி. அப்பாங்கில் பிரபஞ்சமாகிய தேரை சிவனொருவனே தச்சனாகவும், சிற்பாசாரியாகவும், இருந்தமைத்தவற்றை இம்மந்திரப் பகுதி விளக்குகிறது. இது உலகவடிவமே தேர் என்ற கருத்துக்கும் விளக்கம் தருவதாகும். இனி, 'கடோபநிஷத்தில்' உடல் தேர், பிராணன் குதிரை, உயிர் தேராட்டு

பவன் என்ற வகையில் வரும் விளக்கமும் அறியத்தருவதாகும்.

சரித்திரரீதியாக நிகழும் ஆராச்சியின் பிரகாரம், கி. பி 5-ம் நூற்றுண்டிலேயே தேர் விழா இருந்ததாகத் தெரிகிறது. கி. பி. 7 - ஆம் நூற்றுண்டில் அமைந்தவையாக மாமல்லபுரத்துப் பஞ்சபாண்டவர் ரதங்கள் கருதப்படுகின்றன. திருவாரூரில் மனு வேந்தன் செயலுக்கு ஆதாரமாக விளங்கும் கல்லாலான தேர் கி. பி. 9 - ஆம் நூற்றுண்டுப் படைப்பாகக் கருதப்படுகின்றது. கி. பி 10, 11, ஆம் நூற்றுண்டுகளில் சோழ மன்னர் காலத்தில் தேர்கள் செய்யப்பட்டமைக்கான கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன.

### தேர் வகைகள்:

தேர்களில் கற்தேர்களும் உள. மரத்தேர்களும் உள. சிற்பத்திறனில் மரத்தேர்களை விடக் கற்தேர்கள் ஒருபடி மிஞ்சியும் இருப்பதாக அவதானிககப் படுகிறது, மாமல்லபுரத்துப் பட்சபாண்டவர் இரதங்கள் கற்தேரமைப்பின் முன்னேடிகள். தனிக் கற்பாறையில் தேரே கோயிலாக அமைத்து அதில் சுவாமியை எழுந்தருள வைத்துக் கண்டு களிகூர்ந்தார்கள் அக்காலத்துச சிற்பிகள். திருவாரூா மனு வேந்தன் தேரும் தனிப் பாறைககல்லில அமைந்ததே. ஒரிசா மாகாணத்திலுள்ள 'கொணரக்' என்ற இடத்தில 'கண்டகியலே' என்ற ஒரு தனிப் பாறைக் குன்றையே 12 சில்லுகள் கொண்ட ஒரு பெருந் தேருருவில் சூரியன் கோயிலாக அமைத்த 'சூரியன் கோயில்' என்ற அக் கோயிலும் மிகப் பெரும் அளவிலான ஒரு கற்தேரேயாம். அதன் சில பகுதிகள் சிதைவுறுலும் சிதையாதிருக்கும் சிற்பங்களும் தேர்க் குதிரைகளும் இன்றும் வனப்புமிக்கனவாகவே கருதப்படுகின்றன. இவ்வகையில் கற்பாறையிலே தேர்வடிவிற் கோயில் வகுத்துச் சுவாமியைப் பிரதிஷ்டை செய்வதற்கு வேண்டுமளவு தொழில் திறனும், வலுவும், ஆக்க ஊக்க சாதனங்களும் அருகிப்போன ஒரு காலகட்டத்தில் சுவாமிக்குரிய கர்ப்பக் கிருகத்தைத் துண்டுக்கற்களால் அமைத்து விட்டு அதை அடுத்த முன்மண்டபத்தை தேர்ச்சில்லுகள் தேர்குதிரைகள் சகிதம் அமைத்துச் சுவாமி தேரிலேயே இருப்பதாகக் காணும் பாவனையாகக் கோயில்கள் அமைந்தமையைக் கூறும் அத்தாட்சிகளும் ஆங்காங்குண்டு. ... கரம், சிதம்பரம், கும்பகோணத்து ... சரம், விருத்தாசலம் கோயில்களில் இ... மைப்புண்மை பிரசித்தமானது.

### தேர் அமைப்பிலிருந்து கோயில் தோன்றியதா?

இத்தொடர்பில இது ஒரு பிரதான கேள்வியாகத் தோ...கிறது. இன்றைய நம் நாட்டுப் பிரசித்த சிற்பாசாரியாகள் 'கலாகேசரி' அவர்கள் இக் கருத்துடையவராகத் தெரிகிறது, மாமலபுரத்து பஞ்சபாண்டவ ரதங்கள் நாகரம், திராவிடம், வேசரம், என்ற மூவகைச் கிற்ப இயல்பில் அமைந்தன என்றும் அவற்றின் பாணியிலேயே கோயில்கள் உருவாயின என்றும் அவருடைய கட்டுரை ஒன்றின் மூலம் அறியக் கிடந்ததுண்டு, கோயிலுக்கு வேறுகத் தேர் செய்யும் இக்காலத்திலும் குறித்த ஒரு கோயில் அமைப்பைக் கருத்திற்கொண்டே அக் கோயிலுக்குரிய தேர் அமைப்பைச் சித்தஞ் செய்யும் முறை இருப்பதாகத் தெரிகிறது. இதுவும காலகேசரியின் கருத்துக்கு ஒரு ஆதரவாகலாம். அது நிற்க,

கலலில் தேர் சமைக்கும் முயல்வில் அலுப்பு நேர்ந்தமைதான் மரத்தேர்களின் தோற்யத்திற்குக் காரணமோ, அல்லது ஆகம முறைப்படி வீதி சுற்றித் தேரிழுக்கும் தேவை நோக்கி மரத்தேர்கள் இயன்றனவோ என்பதும் விசாரணைக் குரியதேயாம், இதை ஆராய்கையில் ஆகமம் முந்தியதோ தேர் முந்தியதோ என்ற பிரச்சினையும் தலைதூக்குதலுங் கூடும். ஆதலால் அதுவும் நிற்க,

### தேர் வடிவங்கள்:

மிகப் பழைய தேர்கள் வட்ட அமைப்புள்ளனவாதலுடன் தட்டுக்கு மேற்பாகம் ஒரே உருண்டை அமைப்பாகவும் இருந்தமைக்குச் சென்னை பொருட்காட்சிச் சாலையிலுள்ள பழைய தேர்கள் அத்தாட்சியாகின்றன, மேற்பகுதி வட்டமாய்த் தொடங்கி ஒடுங்கி ஒருங்கிப்போய்க் கூம்பாக முடியும் அமைப்புப் பிற்காலத்ததென்று கருதப்படுகிறது. தேர்த்தட்டு வட்ட வடிவமாகவும், ஆறு அல்லது எட்டு அல்லது பத்துக் கோண வடிவமாகவும் அன்றைய தேர்களிலுஞ் சரி இன்றைய தேர்களிலுஞ் சரி அமைக்கப்படு

கின்றது. அடி...க்கிலிருந்து பல கோணங்களுடைய த... ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி... அமைப்பும் உண்டு, இந்த அமை... பொறுத்தே தேர் முழுத்தேர் ...த்தேர் அரைத்தேர் எனக் கணிக்கப்படு...வும் கூறுவர். இவற்றின் விபரங்கள் சிற்பாசாரியர்கள் வாய்க் கேட்டறிதற்பாலன.

தேர் சிற்பங்கள்:

தேரே தனிச்சிற...ாயிருக்க, மேலும் அதற்குச் சிற்பங்கள் பொருத்தப்படுதலிலேயே ஒரு தனி அழகுண்டு. நம் நாட்டுச் சிற்பாசாரியர்களின் அழகுக் கலையுணர்ச்சியின் அதியுன்னதத்துவம் அதிலே தங்கியிருத்தல் கண்கூடு. தேர்ச்சிற்பங்களில் மண்ணுலக வாழ்வைச் சித்தரிப்பன ஒருவகை, ஆகாய உலக வாழ்வைச் சித்தரிப்பன ஒரு வகை, விண்ணுலக வாழ்வைச் சித்தரிப்பன மற்றொருவகை, சிவலோக வாழ்வைச் சித்தரிப்பன மற்றொருவகை, அரசன் கொலுவிருத்தல், நடன நாட்டிய நிகழ்ச்சிகள், காமலீலா விவகாரங்கள் சம்பந்தமான சிற்பங்கள் மண்ணுலக வாழ்வைச் சித்தரிப்பன. மேல் பக்கம் மனிதர் வடிவாகவும் கீழ்ப்பக்கம் மீன், பறவை, விலங்கு என்பவற்றில் ஒன்றின் வடிவமாகவும் அமையும். 'கின்னர' சிற்பங்கள் ஆகாய உலகைச் சார்ந்தவை. நடராசவடிவம், விஷ்ணு வடிவம் புராண வரலாற்று நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்டவை சிவலோக வாழ்வைச் சித்தரிப்பவை. இவ்வமைப்பும் தேர் பிரபஞ்சத்தோற்றமே என்ற கருத்துக்கு ஆதரவாகும்.

முடிவு:

'தேர் நிலைக்கு வந்து விட்டது' என்றால் பல அல்லல் தொல்லைகளினால் இழுபட்ட ஒரு காரியம் ஒருவாறு முடிவடைந்துவிட்டது. என்று அர்த்தமாகும். தேர் ஒன்றைச் செய்வதாயினுஞ்சரி, தேரைப்பற்றிச் சரியான விளக்கங் கொடுத்து ஏதும் எழுதுவதாயினுஞ்சரி அந்த அர்த்தானுசாரமாயேயிருத்தல் அவதானிக்கத்தகும். எனவே, ஒருவாறு முடிந்து விட்டதாகக் கருதி இக்கட்டுரையில் நிறைவு கொள்வோமாக,

# நன்நெஞ்சே நினை.

சி. அப்புத்த
(அதிபர்) கலைமகள் மக [illegible] யாலம்,
மயிலிட்டி

''அறஞ்செய விரும்பு'' என்று எங்கள் அருந்தமிழ்க் கிழவி ஔவை பேசுகின்றார். விரும்புதல் மனத்தின் செயல், செய்தல் காயத்தின் செயல், கூர்த்த அறிவுடைய கிழவி ''அறத்தைச் செய்'' என்று சொல்லாது அறத்தைச் செய்வதற்கு விரும்பு என்று சொன்னாளென்றால் அங்கு ஏதோ உள்ளார்ந்த பொருள் ஒன்று இருக்க வேண்டுமென்று எண்ண இடமுண்டு. ஒன்றைச் செய்வதிலும் நினைத்தல் இலகுவானது. எல்லோராலும் எளிதாகச் செய்யக்கூடியதென்னுங் கருத்துக்கிடமாயது. செயற்பாட்டிற்குப் பொருள், பொழுது, முயற்சியென்பன உபகாரமாதல் வேண்டுமென்னுங் கருத்தாற் சாதாரண உலகியல் வாழ்க்கையிற் கடினமானதென்ற எண்ணம் நிலவுகின்றது. உலகியலில் நினைக்கச் சொல்வது, விரும்பச் சொல்வது எதிர்புக்கு இடமாகாது. விரும்பினால் விரும்பலாம். விருப்பமில்லையெனில் விட்டுவிடலாம். அதனால் மனப்போராட்டத்திற்கு இடமில்லாது போய்விடுகின்றது. அறத்தைச் செய் என்று சொன்னால் சொல்பவருடைய தகுதிப்பாடென்ன? எமது பொருளாதார நிலையைச் சிந்தித்துச் சொன்னாரா? செய்வதும் செய்யாது விடுவதும் எமது விருப்பைப் பொறுத்தது; இவர் யார் சொல்வதற்கு? என்பனவாய் பல வினாக்கள் எழ இடமுண்டாகின்றது. அத்தகு முரண்பாடான கருத்து வேறுபாடுகளிலிருந்து விடுபடுவதற்கு இத்தகு முபாயத்தைக் கிழவி கையாண்டிருக்கலாம்.

மற்றுமொருவகைச் சிந்தனைக்கு இடமுண்டு. அறமென்பது என்ன? என்ற வினாவிற்கு விடை கண்டால் அது நிறைவாகும். ''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'' என்று பேசுவர் வள்ளுவர். மாசு - குற்றம், அழுக்கு முதலாய பொருள்தரு மொருசொல் மனங்குற்றமற்று - அழுக்குகளை நீத்துப் புனிதமாக இருக்குமானால் அதுவே அறமாக அமையும். அவ்வாறாய உள்ளத்தை இடமாகக் கொள்வான் இறைவன்.

''மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்''

என்று வள்ளுவர் கூறும் மற்றோர் குறளுக்குப் பொருள் க[illegible] பரிமேலழகர் ''அன்பான் நினைவரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினான் என இறந்தகாலத்தாற் கூறினார்.'' எனச் சொல்லுவர். இத்தகு உணர்வுகள் நமக்கு ஒரு உண்மையைத் தெளிய வைக்கின்றன. நினைவு செயலோடொக்கும் என்பதுதான் அது. நினைந்தால் அது செயற்படும். அந்த நினைவு எந்தவித பலாத்காரமுமின்றி உள்ளம் ஒன்றிச் செயற்படுவதாய் அமைய வேண்டும். பூசலார் நாயனாருடைய மன முயற்சியை இங்கு நாம் கருத்திற் கொண்டு இன்பமடைய இடமுண்டு. உலகியலுக்கு வாய்ப்பாகக் கோயில் சமைக்கமுடியாது போனவிடத்து மனத்திலேயே பெரியதொரு கோயிலைக்கட்டி முடித்தவர் அவர். அக்கோயிலில் இறைவன் முன்னுரிமையோடு இடம் கொண்டார் என்று அறிகின்றோம். எனவே உள்ளத்தால் ஒருவன் நினைக்கும் நினைவு, அஃதாவது உணர்வோடு ஒன்றிய நினைவு செய்த செயலுக்கு ஒப்பானது என்று அறியமுடிகின்றது. மனம், வாக்கு, காயம் என்பவற்றுள் மனம் முதலிடம் பெற்றமைக்கான காரணம் இதுதான் என்பதை இப்போ யாம் உணர்ந்து கொள்ளமுடியும். அதனாலேதான் எங்கள் திருமுறைச் செல்வர்கள், அருட்பாடல்கள் தந்த அடியவர்கள் நெஞ்சை விழித்துப் பாடல்கள் செய்துள்ளனர்.

மூன்றாவது ஆண்டிலே தேவாரம் பாடிய திருஞானசம்பந்தப் பெருமானார் ''தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக் காடுடைய சுடலைப் பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்'' என்று காட்டுகின்றார். தோடுடைய செவியன்; ஆண்மகன் தான். ஆயின் ஒருகாதிலே தோடுண்டு அது தான் முதலிலே தோற்றுகின்றது. உழிவிற்

ரேன்றிய வித்[illegible]சமான கோலம் முத லிலே படுகின்[illegible]ந்தைகளின் கட்பார் வைக்கு இப்ப[illegible]ற்பங்கள் தான் முத லிலே தோ[illegible]ே தேவாரத்திலே காணுந் த[illegible]துக்கள் விரிவானவை. விடை யேறி[illegible]ர வெண் மதிசூடி, காடு டைய சுடலைப் பொடியைப் பூசியவர். இந்தத் தோற்றம் நல்ல அமைதியும் சாந்த மும் புனிதத்தன்மையும் பொருந்தியது. குழந்தைகளைக் கவரக்கூடிய ஆடம்பரமான தோற்றமன்று. ஆனல்[illegible]ந்தக்குழந்தை மற் றைக் குழந்தைகளைப் போன்றதன்று. அற்பு தமான பிறவி. அதனல் அக்குழந்தைக்குச் சுடலைப்பொடி பூசி விடையேறி வந்த வந்த அந்த உருவம் கவர்ச்சிக்குரியதாகிறது. நீரா டிவந்த தந்தையார் குழந்தையின் வாயில் பால்பருகிய சான்று கண்டு உனக்குப் பால் தந்தது யாரென்று அதட்டிக் கேட்கின்றர். குழந்தை சம்பந்தர் அந்தக் கேள்விக்கு நேரான பதில் தரவில்லை. யாரோ ஒருவரி டமிருந்து பால் வாங்கிக் குடித்து விட்டே னென்றுதானே நீங்கள் கடிந்து கொள்கின் றீர்கள். பாலைத் தந்தவர்கள் என் உள்ளத் தையே கவர்ந்து சென்றுவிட்டார்கள் என்று குழந்தை கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட மகிழ்ச்சி நிலையிற் பேசுகின்றது. உலக இன்ப துன்ப நிலைகளுக்கு ஆட்படவேண்டிய நிலை யினின்றும் விடுபட்டு விட்டேனென்ற உள் ளுணர்வு குழ்ந்தைக்கு. இங்கே உள்ளத்தின் உயர்ந்த நிலையைத் தெளிய முடிகின்றது.

உயர் பண்பு பொருந்திய உள்ளம் இறை வன் எழுந்தருளியிருக்கும் கோயிலாக அமை யும். இறைவன் மகிழ்ச்சியோடு எழுந்தருளி யிருப்பான். எல்லோருடைய உள்ளத்தும் இறைவன் எழுந்தருளி இருக்கின்றன் என்ற பொது நிலையை நாம் சிந்தித்தாலும் அங்கே அவன் இருப்பது புலனவதில்லை ஒருமைப் பாட்டோடு கூடிய தியானத்துடனுகி நிற்ப வர் மனதுள் இறைவன் களிநடம் புரிவான்.

"எண் ஒன்றி நினைத்தவர் தம்பால்
உள்நின்று மகிழ்ந்தவன்"

என்று பேசுவர் சம்பந்தப் பெருமான். கற்ற நெஞ்சம் உயர் பண்பு பொருந்திய நெஞ்சம். எனவே கற்றவர்கள் நெஞ்சத்தில் இறைவன் குடிகொள்வான். இறைவன் திரு நாமத்தைப் பேசுவோர், இறைவன் [illegible]ருப் புகழைப் பாடுவோர், இறைவனை உள்ளன் போடு வணங்குவோர் கற்றவர்கள்.

"கல்லா நெஞ்சில்
நில்லான் ஈசன்
சொல்லா தாரொடு
அல்லோம் யாமே"

கல்வியறிவுடையவர்கள் இறைவனையே நினைப்பார்கள். அவனுடைய திருவருளைப் பெற ஆர்வம் மிகப்பெறுவார்கள். தம்மன த்துள்ள மாசைக் களைய முயல்வர். இவர் கள் உண்மையாகக் கற்கவேண்டியதைக் கற் றவர்கள் இவ்வண்ணம் உணராதோர் கல்வி யைப் பெற்றிருப்பினும் கலாதவரே. கற்ற தனலாய பயன் வாலறிவனைத் தொழுதல் என்று பொய்யாமொழி புகலும். அவ்வகைக் கல்வியைப் பெறுதவர் நெஞ்சில் இறைவன் நிற்கமாட்டான். அவன் திருநாமத்தைச் சொல்லார்க்கு யாம் சுற்றமும் ஆகமாட் டோம், என்று அறுதியிட்டுரைக்கின்றர் சம்பந்தப் பெருமான். கல்வி பாடசாலைக ளில் மட்டும் பெறப்படுவது என்ற எண்ணம் பலருக்கு உண்டு. அது தவறு. உண்மை விளக்கம் பெறவேண்டும். நெஞ்சத்து நல் லம் யாம் என்னும் நடுவு நிலைமை உணர்வு வரவேண்டும். இது உண்மைக் கல்விப்பயன். இது எங்கேயுங் கிடைக்கலாம். இந்தப் பக் குவநிலை அடையாத - கல்லாத நெஞ்சத்து இறைவன் இருக்கமாட்டான் என்று கூறும் சம்பந்தப்பெருமான் தமது உள்ளத்திலே இறைவன் உமையம்மையோடு எழுந்தருளி யிருக்கின்றன். எனவே தமக்கு எதுவித தொல்லையும் நிகழ இடமில்லை யென்று கூறு கின்றர்.

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண் [டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் [வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே."

குற்றமற்ற பிறைச் சந்திரனையும் கங்கா நதி யையும் சடாபாரத்தில் ஏற்றுக்கொண்டு என்னுள்ளத்தே புகுந்திருக்கின்றன். திங்கள்

கங்கை ஆகியவற்றின் குறைகளைப் போக்கி கருணை செய்யு முகத்தால் முடிமேற் கொண்டான். எமக்கும் அருளுவான என்பது நிச்சயம் என்ற தொனிப்பொருள் பிரதிபலிக்க ''மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால்'' என்று பேசுகின்றார்.

தென்திசைக்கண் பெரியதொரு பிரகாசம் தோற்றுகின்றது. கோடி சூரியர்கள் சேர்ந்துநின்றாலும் ஈடாகாத அளவிற்குஒளிப் பிரபை பெருக்கமடைகின்றது. யாரையும் வணங்காத இறைவனை அன்றி வேறுயாரையும் வணங்காத உபமன்யுமுனிவர் எழுந்து தென்திசை நோக்கி நடந்து கொண்டே வணங்குகின்றார். மற்றை முனிவர்கள் வியப்போடு கேட்கின்றனர்.

''சம்புவின்னடித் தாமரைப் போதலால்
எம்பிரானிறைஞ்சா யிஃதென்னெனார்''

என்று எல்லோரும் வியந்து நிற்கின்றனர். பதில் கிடைக்கின்றது.

''தம்பிரானைத் தன் உள்ளந் தழீயலின்
நம்பியாரூரன் நாம் தொழுந் தன்மை
யான்''

எம்பெருமானைத் தன்னுயை உள்ளத்தாலே தழுவிக்கொண்டவன் ஆகையால் யாம் அவனை வணங்கலாம். என்று முனிவர்க்கெல்லாம் முனிவராய உபமன்யுமுனிவர் கூறுவதைக் காண்கின்றோம். உணர்வு முழுமையும் இறை சிந்தனை என்று சொல்வதிலும் நீக்கமற இடையிடின்றி இறைவனையே சிந்தையிற் கொண்டவன் என்னும் நிலையை உபமன்யு முனிவர் சொல்லுமாற்றால் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. நெஞ்சு நினைப்பதன் உயர்வை இங்குதான் மிகச் சிறப்பாக நாம் கண்டுகொள்கின்றோம்.

ஆனதினால்,

''நன்னெஞ்சே உனையிரந்தேன் எம்பெருமான்
[திருவடியை
உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை
[வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை எப்போ
[தும்
பன்னுஞ்சீர் வாயது[illegible]கண்ணே
[[illegible]ரிநதிட வே

என்று நெஞ்சி[illegible] பெருமான் இரக்கின்ற நிலையைப்[illegible]ன்றோம்.

''நெஞ்சார நீடு நினைவாரை மூடுவினை தேய நின்ற நிமலன்'' ஆய காரணத்தாலே ''நீள நினைந்து அடியேன், தம்மை நித்தலுங் கைதொழு[illegible]ன்'' என்ற நிலை கைவரப் பெறவேண்டும்.

''தந்தையார் போயினார் தாயாரும் போயி
[னார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டு ஒரு கூற்றத்தார்
[பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்
ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுது உய்யலாம் மையல்
[கொண்டு
அஞ்சல் நெஞ்சே''

பரிதாபத்திற் கிடமாய நெஞ்சே! எந்த நாளில் நீ வாழவேண்டும் என்று எண்ணுகின்றாய். அப்பா போய்விட்டார்; அம்மாவும் போய்விட்டார், நாமும் போவோம். எனவே ஆரூரனைத் தொழுது உய்தியடையலாம். அச்சப்படாதே, இனி என்ன செய்வது? என்று மிக அனுதாபப்படுகின்றார் ஞானசம்பந்தர். இவ்வண்ணம் பரிவு காட்டிய அவர்களே நீ என்ன அப்பா புண்ணியம் செய்தாய்? ஒருநாள் இருநாள் என்று சொல்லமுடியாது; நீண்டகாலமாக, இல்லை தொடர்ந்து நீ என்னோடு வாழ்கின்றாய். இந்தப் பிறவியில் நல்லபுண்ணியம் ஏதாவது செய்திருப்பாய் என்று என்னாற் சொல்ல முடியவில்லை. முன்னைய பிறவிகளில் சிறந்த நல்ல புண்ணியம் ஏதோ செய்து விட்டாய். அல்லது இந்த உயர்ந்த இன்பானுபவ வாழ்க்கை உனக்குக் கிடைக்க முடியாது. என்று மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மிதக்கின்றார்.

''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங் கடல் வையத்து

முன்னை [illegible] நல்வினைப் பயனிடை'' என்று [illegible] பெருவாழ்வு பெற்ற பெரு மகிழ் [illegible] ழைக்கின்றார். அந்த நிலை அவர [illegible] ழ்ந்த சம்பவந்தான் என்ன?

''முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பின்னி ஆதரித் [illegible] த்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே''

செய்ய வேண்டிய உண்மையான வேலையைச் செய்தாய். வலஞ்சுழி வாணனை வழி பட்டாய். இது கிடைத்தற்கரிய பேறு தான் வலஞ்சுழி வாணனை வணங்கியதால் உனக்குப் புண்ணியம் என்று யான் சொல்ல வில்லை. அவனை வணங்கியதே புண்ணியச் செயல்தான், அவ்வளவிற்கு முன்னைப் புண்ணியம் உனக்கு நிறைய உண்டு. பெரும் பேறு பெற்றோம் என்று தன்னைக் கட்டுப் படுத்த முடியாதளவிற்கு ஆனந்தக்கூத்தாடு கின்றார். இந்த அனுபவ முதிர்ச்சி காரண மாக

''நீ நாளும் நன்னெஞ்சே
நினைகாண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்
சாய்க்காட்டு எம்பெருமாற்கே
பூநாளும் தலை சுமப்பப்
புகழ் நாமம் செவி கேட்ப
நாநாளும் நவின்றேத்தப்
பெறலாமே நல்வினையே''

என்று நெஞ்சிற்கு அறிவுறுத்து முயற்சியைக் காணுகின்றோம்.



# திருமுருகாற்றுப்படை

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் உள்ளத் துறை: 1

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரிடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

...ட்டி முனியன் வளவு அருள்மிகு முருகையன்

...த்திரத்தேர் வெள்ளோட்ட விழா

சிறப்புற வாழ்த்துகிறோம்.

N, சிவஞானரத்தினம்

அன் கம்பனி

ஐஸ்மீன் கருவாடு ஏற்றுமதியாளர்கள்.

மயிலிட்டி.

சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவின்போது
முருகையன் திருவருளை எண்ணி உளம் பூரிக்கி...

# குமார் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: M. யோகராசா

பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.

எமது நல்வாழ்த்துக்கள்.

# ஈஸ்வரன் மரக்காலை, மயிலிட்டி.

எங்களிடம் வீடுகள் கட்டுவதற்கு தேவையான மரங்களும்,

மற்றும்

மேசை அலுமாரி போன்ற தளபாடப் பொருட்களும்
நிதான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஈஸ்வரன் மரக்காலை,
(ஆஸ்பத்திரி வீதி, முன்பாக)

உரிமையாளர்:- மு. வைத்தீஸ்வரன். மயிலிட்டி,
காங்கேசன்துறை.

மயி[illegible]னியன் வளவு அருள்மிகு முருகையன்
சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

சிறப்புற வாழ்த்துகிறோம்.

## நல்லதம்பி பிள்ளையாகுட்டியும் மைந்தர்களும்

ஐஸ்மீன் கருவாடு ஏற்றுமதியாளர்கள்.

185, பாங்ஷால் வீதி
கொழும்பு, *11.*
தொ. பே. *35793.*

அலம்பில்
முல்லைத்திவு.

தாயகம்
மயிலிட்டி.
தொ. பே. 37 K.K.S.

மயிலிட்டி முனையன்வளவு அருள்மிகு

சித்திரத்தேர் வெள்ளோட்ட வ

சிறப்புற வாழ்த்துகிறேம்.

# M. மதியழகன் அன்

# M. K. முருகுப்பிள்ளை

பிள்ளையார் வீதி, மயிலிட்டி.

வெள்ளோட்ட விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

வே. ஆனந்தக்கிளி
மயிலிட்டிக் கரை

நாவிற்கு அதிக சுவையைத் தருவது குணம் கிறீம் ஹவுசின்
உற்பத்திப் பொருட்களான ஐஸ்பழம், ஐஸ்கிறீம், ஐஸ்சர்பத் முதலியன.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்படும் எமது உற்பத்திப் பொருட்களை
குணம் கிறீம் ஹவுஸ் விற்பனை வாகனத்தில் பெற்று மகிழுங்கள்.

குணம் கிறீம் ஹவுஸ்
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.

மயிலிட்டி முருகையன் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

ஓர் அன்பன்

காங்கேசன்துறை.

மயிலிட்டி முனையன் வளவு அருள் மிகு முருகை...
புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா...
சிறப்பாக நிகழ வாழ்த்துகிறோம்.

## வசந்தா ஸ்தாபனம்

மீன் பிடி வலைகள் உபகரணங்கள் சிலோன் ஸ்தாபன உற்பத்திகள் ஆகியவற்றிற்கு மயிலிட்டியில் முன்னணி ஸ்தாபனம்

உரிமையாளர்: திருமதி ராமசுவாமி தம்பி வசந்தாதேவி.



மயிலிட்டி முனையன் வளவு அருள்மிகு முருகையாவின் சிற்பக் கலையழகு மிளிரும் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா அன்பர்கள் யாவரும் களி கொள்ளும் வகையில் நடைபெற நமது உளமார்ந்த வாழ்த்துக்கள்!

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!!

## லங்கா எரிபொருள் நிலையம் மயிலிட்டி

*உரிமையாளர்:* திருமதி. செ. பூபாலசிங்கம்

# நன்றி நவில்தல்

மயிலிட்டி முனையன் வளவிற் கோவில் கொண்ட அருள் மிகு முருகையனுக்கு சித்திரத் தேர் அமைக்க வேண்டுமென்ற அவா முருக பக்தர்களுக்கு 1976 ம் வருஷ நடுப்பகுதியில் அரும்பியது இன்றும் எமது ஞாபகத்தில் இருக்கிறது. இந்த அவா மொட்டாகி மலராகிய போதே சித்திரத் தேரை அமைக்கும் பணியை மயிலிட்டி வடக்கில் பரவலாகக் காலம் காலமாக வாழ்ந்துவரும் சிற்பக்கலைஞர்கள் பொறுப்பிலேயே விடுவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

இந்த ஏற்பாட்டின் படி எமது உள்ளூர் சிற்பிகள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒரு தலைமையின் கீழ் பெருமானுக்குச் சித்திரத் தேர் அமைப்பதென்று ஆரம்பத்தில் முடிவெடுக்கப்பட்டாலும் அது காலப் போக்கில் கைகூட வில்லை. பெருமானின் திருவுள்ளமோ என்னவோ, வடமயிலை கனகசபை சிற்பாலயத் தலைமை ஸ்தபதியார் திரு. சி. நவரத்தினம் அவர்களின் தோள்களே ஆரம்பத்திலிருந்து இறுதி வரைக்கும் இந்தப் பெரும் பணியைச் சுமந்திருக்கின்றன என்பது நாம் மறக்க முடியாத உண்மை. முருகப் பெருமானுக்கு வாய்த்த வீரவாகு தேவரைப் போன்று தலைமை ஸ்தபதியார் நவரத்தினம் அவர்களுக்கு சிரேஷ்ட உதவியாளராகக் கடமை புரிந்தஉதவி ஸ்தபதியார் திரு. செ. சண்முகநாதன் அவர்களின் பொறுப்பான கடமையுணர்ச்சி இந்தச் சித்திரத் தேர் உருவாக்கத்தில் தவிர்க்க முடியாத ஒரு அத்தியாயம், அடுத்தபடியாக க. இராஜலிங்கம், செ. சிவரத்தினசிங்கம் செ. தியாகராசா ஆகிய இளைஞர்களின் பணியும் இத்தேரில் மறக்க முடியாத தொன்றாகும்,

மயிலை முருகையனுக்கு இன்று சித்திரத் தேர் அமைக்கப்பட்டுள்ள தென்றால் அது முற்றும் முழுதாக இந்தச் சிற்பாலயக் கலைஞர்களின் கண் துயிலா முயற்சியே! இது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல ஆரம்பத்திலிருந்து இறுதி வரைக்கும் ஊதியம் கருதாது பின் இரவு ஒரு மணிக்கும் மேலாக இக் குழு பணியாற்றி வந்த புனிதம் நம் வாழ் நாள் பூராகவும் நெஞ்சில் நன்றியுணர்வோடு போற்றப்பட

வேண்டியது. காலத்தால் அழியாத இவர்களின் அற்புதச் சிருஷ்டிக்கு எம்மால் ஞாலத்தைக் கொடுக்க முடிந்தாலும் ஈடாகா...க்கு இடத்தில் நாம் அவர்களுக்கு நமது இதய பூர்வமான ந... சமர்ப்பிப்பதிலும் பார்க்க முருகப் பெருமானின் பூரண... குறைவறக் கிடைக்கவேண்டுமெனப் பிரா... சாலப் பொருந்தும். வாழ்க அவர்கள் கலைத் தொண்டு! வளர்...ர்களின் சிற்பாலயம்.

இந்தச் சித்திரத் தேர் உருவாக்கத்தில் அடுத்தபடியாக நன்றியுணர்வோடு போற்றப்பட வேண்டியவர்கள் இந்த இறை பணிக்கு பொருளாலும் உடலாலும் உள்ளத்தாலும் உதவி புரிந்த வள்ளல் பெருமக்கள், தேவையுணர்ந்து அள்ளி அள்ளித் தந்த செல்வந்தர்கள், வாதை கருதாது தமது உடலால் உழைத்த இளம் முருகனடியார்கள் இன்னும் தமது உள்ளத்தால் பெருமான் எப்போ? எப்போ? சித்திரத் தேரில் பவனி வரப் போகிறான் என்று ஆசித்து வந்த நல்ல மனங் கொண்டோர் அனைவருக்கும் நன்றியுணர்வோடு கூடிய எமது அன்பைத் தெரிவிக்கின்றோம்.

இம்மலருக்குரிய ஆசிச் செய்திகள், கட்டுரைகள் விளம்பரங்கள் தந்துதவிய பெரியார்களுக்கும், புகைப்படங்கள் எடுத்துதவிய காங்கேசன் துறை லிங்கம் ஸ்ருடியோ ஸ்தாபனத்தாருக்கும், அச்சுக் கட்டைகள் செய்துதவிய யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஸ்ருடியோ ஸ்தாபனத்தாருக்கும். குறித்த நேரத்தில் மலரை அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் சித்திரா அச்சகத்தாருக்கும் பல வழிகளில் உதவி புரிந்த யாவருக்கும். எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பொ. சற்குணநாதன்
(ஆலய பரிபாலன சபை செயலாளர்)

உ

செல்வா ஸ்ரோர்ஸ்

அலுமினியம், எவர்சில்வர்,

பித்தளை பாத்திரங்களுக்கும்,

அன்பளிப்பு பொருட்களுக்கும்,

லொறி ராண்ஸ்போட் சேவைகளுக்கும்

சிறந்த இடம்

# செல்வா ஸ்ரோர்ஸ்

2ஏ நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: **7810**


சித்திரா அச்சகம் மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.